# தவக்காலத்தின் ஐந்தாவது ஞாயிறு

## மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா 43:16-21, பிலிப்பியர் 3: 8-14, யோவான் 8:1-11

## திருப்பலி முன்னுரை:

இறைமகன் இயேசுவில் அன்பு நிறை அருட்தந்தை! (அருட்தந்தையர்களே) இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே! மன்னிப்பளிக்கும் கடவுளின் பெயரால் இன்றைய திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். இன்று நாம் தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறை சிறப்பிக்கின்றோம்.

மாற்றத்துக்கு உரியவர்களே, இன்றைய திருவழிபாடு, பழைய பாவ வாழ்வை விட்டுவிட்டு புதிய அருள் வாழ்வுக்கு கடந்து செல்ல நம்மை அழைக்கிறது. நாம் எத்தனை முறை பாவம் செய்தாலும், மனம் வருந்தி ஆண்டவரிடம் திரும்பும்போது, நம்மை மன்னிக்க அவர் தயாராக இருக்கிறார். பிறரது குற்றங்களை அலசி ஆராயும் நாம், நமது பாவங்களை எண்ணிப் பார்க்கவேண்டுமென ஆண்டவர் இயேசு நமக்கு அழைப்பு விடுக்கிறார். எல்லோரும் நம்மை விட்டுச் சென்ற பிறகு, நாம் கடவுள் முன் கணக்கு கொடுக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்வோம். இயேசுவைப் பின்பற்றி வாழ அழைக்கப்பட்டுள்ள நாம் அனைவரும், நமது பாவ வாழ்வை களைந்து விட்டு அவரிலே புதுவாழ்வு பெறும் வரம் வேண்டி, இத்திருப் பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**கடலுக்குள் வழியை ஏற்படுத்தியவரும், பொங்கியெழும் நீர்நடுவே பாதை அமைத்த வரும், தேர்களையும், குதிரைகளையும், படைவீரரையும், வலிமைமிக்கோரையும் ஒன்றாகக் கூட்டி வந்தவரும், அவர்கள் எழாதவாறு விழச்செய்து, திரிகளை அணைப்பது போல் அவர்களை அழித்தவருமாகிய ஆண்டவரே!**
உமது பணியாளர்களாகிய திருத்தந்தை, ஆயர்கள் குருக்கள், துறவிகள், பொது நிலைப் பணியாளர்கள் அனைவரும் பணிசெய்யும் போது அவர்களை எதிர்க்கும் எல்லாச் சக்திகளையும் முறியடித்து அவர்களைக் காப்பாற்றியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மன்னிப்பையும், இரக்கத்தையும் தாராளமாகப் பொழியும் அன்புத் தந்தையே இறைவா,**
நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர் என்ற உமது திருமகனும், எங்கள் ஆண்டவருமான இயேசுவின் வார்த்தையைப் பின்பற்றி நாங்கள் மற்றவரைத் தீர்ப்பிடாதிருக்கவும், பாவத்திற்கு காரணமான செயல்களை அடியோடு வெறுத்து ஒதுக்கவும் எமக்கு நல்மனத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நல் ஆயனே! எம் இறைவா!**
இன்றைய உலகில் நிலவும் இளையோர்க்கு எதிராக எழுப்பப்படும் கலாசார சீர்கேடுகள், மாயகவர்ச்சிகள், பாலியல் வன்முறைகள் இவை அனைத்திலிருந்து எம் இளைனோரை பாதுகாத்து உம் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவற்றின் மறைபொருளை அறிந்து நற்செய்தியின் தூதுவர்களாக வாழ வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மன்னிப்பு அருள்பவராம் இறைவா,**
சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும், கடமை தவறியதாலும் செய்த பாவங்களால் உமது அன்புறவை இழந்து தவிக்கும் மக்களுக்கு, உமது இரக்கத்தால் மன்னிப்பு வழங்கி புதுவாழ்வு அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**மாற்றத்தை தருபவராம் இறைவா,**
உம் மீது அவநம்பிக்கை கொண்டிருக்கும் உலக மக்களிடையே மனமாற்றத்தை உருவாக்கி, அவர்கள் உள்ளங்களில் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் ஒளியை ஏற்ற வேண் டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.